**நீதித்துறை நடுவர் எண் II நீதிமன்றம் இராமநாதபுரம்**

**முன்னிலை திரு.S.B. சுஜித், B.A. B.L. (Hons).,**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்**
**நீதித்துறை நடுவர் எண்.2 (முகூபொ),**
**இராமநாதபுரம்.**

2026 ம் வருடம் மார்ச் மாதம் 23–ம் நாள் திங்கள்கிழமை

**CIS. Cr.M.P.No. 1833/2023**

**CNR No. TNRM 02– 002392–2023**

**CIS. Cr.M.P.No. 459/2024**

**CNR No. TNRM 02– 000581–2024**

வி.கே. பிரதீவ்,(24/2018)
த/பெ. கதிரேசன்,
99/3 வசந்தவேணி நாச்சியார் நகர்,
இராமநாதபுரம் மாவட்டம். . . . மனுதாரர்/புகார்தாரர்

–– எதிராக ––

சரவணக்குமார் . . . எதிரி

அரசுக்காக காவல் ஆய்வாளர் அவர்கள்,
மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலையம்,
இராமநாதபுரம்.
குற்ற எண். 02/2019 . . . அரசு குற்றமுறையிடுபவர்

மனுதார்/புகார்தாரர் தரப்பில் புலன்விசாரணை அதிகாரி தாக்கல் செய்துள்ள குற்ற இறுதி அறிக்கையில் மணிகண்டன் மற்றும் தீபன் ஆகியோர்களை நீக்கிவிட்டு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்து இருப்பதை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட இம்மனு 24.03.2023–ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் திரு. கே. அன்புச்செழியன் அவர்கள் ஆஜராகி ஆவணங்களை பரிசீலனை செய்த பின்னர் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும். . .

**உ த் த ர வு**

இம்மனுவானது மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலைய குற்ற எண்.02/2019–ல், சட்டப்பிரிவுகள் u/s 420, 506(i) மற்றும் 67 Information Technology (Amendment Act)ன் கீழான வழக்கில், புலன்விசாரணை அதிகாரி தாக்கல் செய்துள்ள குற்ற இறுதி அறிக்கையில் மணிகண்டன் மற்றும் தீபன் ஆகியோர்களை நீக்கிவிட்டு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்து இருப்பதை ஆட்சேபித்து இம்மனு மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர்/புகார்தாரர் தரப்பு மனு மற்றும் வாதம் :–**

மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் புகார்தாரர் கொடுத்த புகாரின் பேரில் குற்றமுறையினரால் இதச பிரிவுகள் 420, 506(i) மற்றும் 67 Information Technology (Amendment Act)படி சரவணக்குமார், மணிகண்டன், தீபன் ஆகியோர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு மேற்படி வழக்கில் மேற்படி குற்றமுறையிடுவோர் காவல்துறையினர் சரவணக்குமார் மீது மட்டும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றும் இதனை புகார்தாரர் கடுமையாக ஆட்சேபிக்கிறார் என்றும் புகார்தாரர் தனது புகாரிலே சரவணக்குமார் தன்னை மிரட்டி கொலை செய்து விடுவதாக கூறிய மிரட்டலுக்கு பயந்து 29.09.2018 முதல் மூன்று மாதங்களாக புகார்தாரருடைய தந்தையின் வங்கிக்கணக்கின் மூலமாக சரவணக்குமார் கூறிய அவரது வங்கிக்கணக்கு எண்களான வளசரவாக்கம் ஸ்டேட்பேங்க் ஆப் இந்தியா வங்கிக்கிளையின் கணக்கு எண். 20391166573 க்கும், ஈக்காட்டுத்தாங்கல் ஆக்ஸிஸ்வங்கி கிளையின் கணக்கு எண். 917010066765149 க்கும், மணிகண்டன் கணக்கு வைத்துள்ள திருச்சி கரூர் வைசியா வங்கி கிளையின் கணக்கு எண். 1196155000193322 க்கும் மற்றும் தீபன் கணக்கு வைத்துள்ள கரூரிலுள்ள கரூர் வைசியா வங்கி கிளையின் 1142155000222344 ஆகிய கணக்கு எண்களுக்கு சுமார் ரூ. 60 லட்சம் வரை பண பரிவர்த்தனை செய்துள்ளதாகப் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் மேலும் புகார்தாரர் பிரதீவ் தனது காவல்துறை விசாரணையின் போது கொடுத்த வாக்குமூலத்திலும், எதிரி சரவணக்குமார் தன்னை கொலை செய்து விடுவதாக மிரட்டியதாகவும் பின்னர் ஒரு நாள் தனது வேலுமாணிக்கம் லாட்ஜ் முன்பு நின்று கொண்டு தன்னை கொலை செய்து விடுவதாக மிரட்டியதால்

மேற்படி எதிரி சரவணக்குமார், வளசரவாக்கம் ஸ்டேட்பேங்க் ஆப் இந்தியா வங்கி கணக்கிற்கு 21.09.2018 முதல் 01.12.2018-ம் தேதி வரை ஆறு தவணைகளில் ரூ. 20,80,000/-ம் சென்னை ஈக்காட்டுத்தாங்கள் ஆக்ஸிஸ் வங்கியின் கிளைக்கு கடந்த 21.09.2018 முதல் 28.12.2018 ம் தேதி வரை பத்து தவணைகளில் ரூ. 21,00,000/-ம் மேலும் எதிரி சரவணக்குமாருக்கு ஏடிஎம் மிசின் மூலம் 1,50,000/-ம் எதிரி சரவணக்குமார், சொன்னதின் பேரில் மணிகண்டனின் திருச்சி கரூர் வைசியா வங்கிக்கிளைக்கு ரூ. 10,00,000/-ம் அதுபோல் தீபனின் கரூரிருள்ள கரூர் வைசியா வங்கிக்கிளைக்கு ரூ. 3,00,000/-ம் ஆக மொத்தம் ரூ. 56,30,000/-ம் பணம் அனுப்பியுள்ளார் என்றும் மேற்படி பணத்தினை தனது தந்தை கணக்கு வைத்துள்ள இராமநாதபுரம் பஞ்சாப் நேஷனல் வங்கிக்கணக்கிலிருந்து RTGS, CDM, NEFT ஆகியவற்றின் மூலம் பணம் அனுப்பியுள்ளார் என்று வாக்குமூலம் அளித்துள்ளார் என்றும் மேற்படி காவல்துறையினர் புகார்தாரர் கூறியது போல் பணம் அனுப்பப்பட்டு உள்ளதா என்று இராமநாதபுரத்தில் இயங்கி வரும் பஞ்சாப் நேஷனல் வங்கி கிளையின் மேலாளரான விக்னேஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலத்தினை பெற்றுள்ளதாகவும் அதேபோல் எதிரி சரவணக்குமார் கணக்கு வைத்துள்ள வங்கி கணக்கிற்கு பணம் வந்துள்ளதை அந்த வங்கியின் மேலாளருக்கு ஒத்துக்கொண்டுள்ளதாகவும் இவ்வழக்கில் விடுபட்ட எதிரி மணிகண்டன் வங்கி கணக்கிற்கு ரூ. 10,00,000/-ம் இராமநாதபுரத்திலுள்ள பஞ்சாப் நேஷனல் வங்கிக் கணக்கிற்கு பணம் அனுப்பப்பட்டுள்ளது என்பதை தனது வாக்குமூலத்தில் மணிகண்டன் கணக்கு வைத்துள்ள திருச்சி கண்டோன்மெண்ட் கரூர் வைசியா வங்கியின் கிளை மேலாளர் தேன்மொழி ஒத்துக்கொண்டுள்ளதாகவும், அதேபோல் எதிரி தீபன் கணக்கு வைத்துள்ள கரூர் வைசியா வங்கியின் மெயின் கிளையின் மேலாளர் சண்முகசுந்தரம், தீபன் கணக்கிற்கு இராமநாதபுரம் பஞ்சாப் நேஷனல் வங்கிக் கணக்கிலிருந்து பணம் வந்ததை ஒத்துக்கொண்டுள்ளார் என்றும்

மேற்படி மூன்று எதிரிகளும் கூட்டுச்சேர்ந்து சதி திட்டம் தீட்டி, புகார்தாரரை மோசடி செய்ய வேண்டுமென்றக் கெட்ட எண்ணத்தில் பொதுக்கருத்துடன் கூட்டுச் சேர்ந்து செயல்பட்டு புகார்தாரரிடமிருந்து ரூ. 56,30,000/-த்தை மோசடி செய்துள்ளார்கள் என்பது புலன் விசாரணையிலிருந்து நன்கு தெரிய வருகிறது என்றும்

மேலும் புலன்விசாரணை அதிகாரி இவ்வழக்கின் எதிரிகளான மணிகண்டன், தீபன் ஆகியோர்களிடம் கு.வி.மு.ச பிரிவு 161(3) படி வாக்குமூலம் பெற்றுள்ளார் என்றும் அந்த வாக்குமூலத்தில் புகார்தாரர் வங்கிக்கணக்கிலிருந்து பணம் வந்துள்ளதை ஒத்துக்கொண்டுள்ளார்கள் என்றும் இவ்வாறான நிலையில் மேற்படி வாக்குமூலத்தை ஒப்புதல் வாக்குமூலமாக ஏற்று அவர்களை எதிரிகளாக சேர்த்திருக்க வேண்டும் என்றும் அதற்கு மாறாக அவர்களை சாட்சிகளாகச் சேர்த்திருப்பது, வியாப்பாக உள்ளது என்றும் மேலும் புகார்தாரரின் வழக்கிற்கு விரோதமாகவும் உள்ளது என்றும் இவ்வழக்கில் புகார்தாரரிடமிருந்து 56,30,000/–த்தை எதிரிகள் மோசடி செய்ய வேண்டுமென்ற பொதுக்கருத்துடன் ஒன்று சேர்ந்து செயல்பட்டிருக்கும்நிலையில் எதிரி சரவணக்குமாரிடமிருந்து ரூ. 9,00,000/–த்தை மட்டும், கைப்பற்றி விட்டு மீதிப்பணத்தை கைப்பற்றாமல் இரண்டு எதிரிகளை நீக்கிவிட்டு, குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்திருப்பது புகார்தாரருக்கு பெருத்த பாதகமான சூழ்நிலை ஏற்படுத்தும், மேலும் கஷ்ட நஷ்டத்தை உண்டாக்கும் என்றும்

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையில் காட்டப்பட்ட மணிகண்டன் மற்றும் தீபன் ஆகிய எதிரிகள் குற்ற இறுதி அறிக்கையில் நீக்கிவிட்டு மேற்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளது புகார்தாரரின் வழக்கிற்குப்பாதிப்பை ஏற்படுத்தும் மணிகண்டன் மற்றும் தீபன் ஆகியோர்கள் எதிரி சரவணக்குமாரின் குற்றச்சதிக்கும், குற்றச்செயலுக்கும், பொதுக்கருத்துடன் சேர்ந்து உடந்தையாக செயல்பட்டுள்ளார்கள் என்றும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் மிகத் தெரிவாள தெரியவருகிறது என்றும் மேற்படி எதிரி சரவணக்குமார் மற்றும் மணிகண்டன் தீபன் ஆகியோர்கள் இவ்வழக்கின் இதச சட்டப்பிரிவுகளான 420, 506(i) மற்றும் 67 Information Technology (Amendment Act) ஆகியவற்றிற்கு உடந்தையாக செயல்பட்டதால் இதச சட்டப்பிரிவுகளான 420, 506(i) மற்றும் 67 Information Technology (Amendment Act) r/w 34 இதச பிரிவின் படி குற்றவாளிகளாக ஆகிறார்கள் என்றும், இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி இதச சட்டப்பிரிவுகளான 420, 506(i) மற்றும் 67 Information Technology (Amendment Act) r/w 34 இதச பிரிவின்படி மூன்று எதிரிகளையும் குற்றவாளிகளாகக் கண்டு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யவேண்டும். மாறாக மணிகண்டன் மற்றும் தீபன் ஆகியோர்களை நீக்கிவிட்டு குற்ற இறுதி அறிக்கை

தாக்கல் செய்திருப்பது சட்டப்பிழையாகும் என்றும் ஆதலால் மேற்படி மணிகண்டன் மற்றும் தீபன் ஆகியோர்களை குற்றவாளிகளாகச் சேர்த்து கோப்பிற்கு எடுக்க அதிகாரம் உள்ளது என்றும் மேற்படி வழக்கில் புலன்விசாரணை அதிகாரி தாக்கல் செய்துள்ள குற்ற இறுதி அறிக்கையில் மணிகண்டன் மற்றும் தீபன் ஆகியோர்களை நீக்கிவிட்டு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்து இருப்பதை ஆட்சேபித்து, இந்த ஆட்சேபிக்கும் மனு தாக்கல் செய்யப்படுகிறது என்றும் விடுபட்ட எதிரிகளான மணிகண்டன் மற்றும் தீபன் ஆகியோர்களையும் சரவணக்குமாருடன் சேர்த்து எதிரிகளாக கண்டு இவ்வழக்கினை கோப்பிற்கு எடுக்க உத்தரவு செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

<u>**தீர்வு :–**</u>

இம்மனுவில் வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பரிசீலக்கப்பட்டது. மேலும், மேற்படி மனுதாரர் தரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்து பாக்கும் பொழுதும், இவ்வழக்கில் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு பட்டியல் சாட்சி 6 கரூர் வைசியா வங்கி கிளை மேலாளர் திருமதி. தேன்மொழி மற்றும் வழக்கு பட்டியல் சாட்சி 7 மேலாளர் சண்முக சுந்தரம் ஆகியோர்களின் வாக்குமூலங்கள் மூலமாக 2ம் உத்தேச எதிரி மணிகண்டன் மற்றும் 3ம் உத்தேச எதிரி தீபன் ஆகியோர்களின் வங்கி கணக்கு பட்டியல் மற்றும் கேவிசி ஆவணங்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது தெரியவருகிறது. மேற்சொன்ன 2 எதிரிகளில் வங்கி பரிவர்த்தனைகளை பரிசீலனை செய்யும் போது 3ம் எதிரி தீபன் என்பவிான் வங்கி கணக்கிற்கு 31.12.2018ம் தேதியன்று இவ்வழக்கின் புகார்தாரரால் அனுப்பப்பட்ட தொகையான ரூ. 3,00,000/–ம் 3ம் எதிரியால் 09.01.2019ம் தேதியன்று தனது வங்கி கணக்கிலிருந்து 1ம் எதிரியின் வங்கி கணக்கிற்கு ரூ. 2,25,000/–ம் அனுப்பப்பட்டுள்ளதும் பல்வேறு தவணைகளில் தொகைகள் எடுக்கப்பட்டு 1ம் எதிரியிடம் ஒப்படைக்கப்பட்டதும் 4வது ஆவணம் மூலமாக தெரிய வருகிறது.

மேலும் 2ம் எதிரி மணிகண்டன் என்பவர் தனது வங்கி கணக்கில் 03.10.2018ம் தேதி பெறப்பட்ட ரூ. 5,00,000/–ம் ஆனது 08.10.2018ம் தேதியன்று பெறப்பட்ட ரூ. 5,00,000/–ம் ஆகியவைகள் பல்வேறு தேதிகளில் வங்கி பிாவர்த்தனை மூலமாக 1ம் எதிரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட 3வது ஆவணம்

மூலமாக தெரிய வருகிறது. மேலும் இவ்வழக்கில் மேற்சொன்ன 2 மற்றும் 3ம் எதிரிகள் வழக்கு பட்டியல் சாட்சிகள் 11 மற்றும் 12 ஆக முன்னிடப்பட்டுள்ளார்கள். இவ்வழக்கின் புகார்தாரர் நீதிமன்றத்தில் விசாரணை மேற்கொள்ளப்படும்போது அவ்வாறு 2 மற்றும் 3ம் எதிரிகளுக்கு பாதகமான சாட்சிகள் பெறப்படும் பட்சத்தில் புகார்தாரர்/மனுதாரர் பிரிவு 319 குவிமுச வின் கீழ் தகுந்த மனு தாக்கல் செய்வதற்கான உரிமை உள்ளது. எனவே மேற்சொன்ன வழக்கின் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு இவ்வழக்கில் புகார்தாரர் தரப்பு முன்னிடப்பட்ட ஆட்சேபணைகள் ஏற்புடையது அல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

புலன்விசாரணை அதிகாரியால் தாக்கல் செய்யப்பட்ட 2 மற்றும் 3ம் எதிரிகள் நீக்கப்பட்டதற்கான அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனு எண். 459/2024 கீழான ஆட்சேபணை மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. இந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் குற்ற பல்வகை மனு எண். 1833/2023 மேற்சொன்னவாறு தீர்மானிக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கை 1ம் எதிரிக்கு எதிராக கோப்பிற்கு எடுத்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

இன்று 2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23–ஆம் நாள் இவ்வுத்தரவு என்னால் இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.03.23 14:12:55 +0530

நீதித்துறை நடுவர் எண்.II (முகூபொ),
இராமநாதபுரம்.